சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்

# திரு.வி.க. நகர் - வில்லிவாக்கம் - அம்பத்தூர் தொகுதிகளில் மருத்துவ முகாம்கள்!

## மருத்துவர்கள் பாலாஜி - ரவீலா பாஸ்கரன் - ஆர்.டி அரசு - வெங்கட கோபாலகிருஷ்ணன் துவக்கி வைத்து நல உதவிகள் வழங்கினர்

சென்னை, நவ. 24 -

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் நவ.27 இளைஞர் எழுச்சி நாளை ஆண்டுதோறும் கொண்டாடி வருவதை தொடர்ந்து நவம்பர் 16 முதல் டிசம்பர் 12 வரை தொடர்ந்து 26 தொடர் நிகழ்ச்சிகளை நடத்த முடிவெடுத்து நேற்று (23-11.25) அமைச்சர் பி. கே. சேகர்பாபு முன்னிலையில் திரு.வி.க நகர், தொகுதியில் அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் செவிலியர்கள் குழுவும் வில்லிவாக்கம் அம்பத்தூர் ஆகிய தொகுதிகளில் கற்பகம் மருத்துவமனை மருத்துவர்கள் செவிலியர்கள் குழுவும் பங்கேற்ற மூன்று மருத்துவ முகாம்களில் முதல் மருத்துவ முகாமாக உதயம் 5.

பிணியற்று வாழ நலம் செய்வோம் உதயத்தை கண்டு வலம் வருவோம் எனும் தலைப்பில் திரு வி க நகர் தொகுதி, புளியந்தோப்பு சமூக நலக்கூடத்தில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஜெ.மணிகண்டன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் மருத்துவ முகாமில் நோபல் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மருத்துவர் பாலாஜி ரவீலா பாஸ்கரன் , இரண்டாவது








மருத்துவ முகாமாக உதயம் 3. ★நலமோடு வாழ்வது செல்வமாகும் நாள்தோறும் உதயமே சொந்தமாகும் எனும் தலைப்பில் அம்பத்தூர் தொகுதி, ராம் நகர் பகுதியில் உள்ள மகாலட்சுமி திருமண மஹாலில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் இரவை பிரபு தலைமையிலான முகாமில் ரங்கா நர்சிங் ஹோம் மருத்துவர் வெங்கட கோபாலகிருஷ்ணன் மூன்றாவது மருத்துவ முகாமாக உதயம் 4. நோயிலிருந்து மீட்டெடுப்போம் சூரிய உதயமாய் நலம் சேர்ப்போம் எனும் தலைப்பில் வில்லிவாக்கம் தொகுதி பெத்தேல் மெட்ரிகுலேஷன் பள்ளியில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் எம். ஜெகதீஸ்வரன் தலைமைலான மருத்துவ முகாமில் கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் ஆர் டி.அரசு மருத்துவம் தேவை பட்டோர்களை பரிசோதித்து அவர்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகள் கொடுத்தும், ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கியும் சிறப்பித்தனர்.

இம் மருத்துவ முகாம்களில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல்,அ. வெற்றி அழகன், ப.ரங்கநாதன், செ. தமிழ்வேந்தன் எம் சாமி கண்ணு, டி எஸ் பி ராஜகோபால் எம் டி ஆர் நாகராஜ், வே வாசு, கூ.பீ. ஜெயின் பி.கே.மூர்த்தி,சரிதா மகேஷ்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெ.பால முருகன், ஜி. ஜெ. பிரபு மாமன்ற உறுப்பினர்கள் புனிதவதி எத்திராசன்,எம்.சரவணன்,டி.வி. செம்மொழி, லதாவாசு ,டாக்டர் ஜி சாந்த குமாரி எம் கமல் மற்றும் கழக செயல்வீரர்கள் நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

குமரி மாவட்டத்தில் இதுவரையில் நடந்த

# 15 நலன் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் 26,729 பேர் பயன்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

கன்னியாகுமரி, நவ.24-

கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட 15 நலன் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் 26,729 பேர் முழு உடல் பரிசோதனை செய்து பயன் அடைந்துள்ளார்கள் - என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ம.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் புத்தளம் எல்.எம்.பி.சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர். அழகுமீனா, தலைமையில் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ம.சுப்பிரமணியன் கலந்துகொண்டு, குத்துவிள க் கேற்றி துவக்கி வைத்து, மருத்துவ பரிசோதனை அரங்குகளை பார்வையிட்டும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:-



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தரமான மருத்துவ சிகிச்சையினை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மக்களை தேடி மருத்துவம், நம்மைக் காக்கும் 48, இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், பாதம் காப்போம், செயற்கை கரு தரித்தல் மையம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சையினை அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று வழங்கிட வேண்டும் என்ற நோக்கத்தில் கடந்த ஆகஸ்ட் 2ம் தேதி சென்னையில் நலம் காக்கும் ஸ்டாலின் என்ற திட்டத்தினை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற 561 முகாம்களில் 8,82,950 பேர் முழு உடல் பரிசோதனை பயன் பெற்றிருக்கிறார்கள். தனியார் மருத்துவமனைக்கு சென்று முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று சொன்னால் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை செலவாகும். ஆனால் இந்த முகாம்கள் மூலமாக ஒரு ரூபாய் கூட செலவு இல்லாமல் முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள முடியும். முழு உடல் பரிசோதனை 16 வது வாரமாக இன்றைய தினம் 35 இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தை பொருத்தவரை 9 வட்டாரங்கள் உள்ளது. ஒரு வட்டாரத்திற்கு மூன்று முகாம் என்கின்ற வகையிலும், நாகர் கோவில் மாநகராட்சிக்கு 3 முகாம் என்ற வகையில் ஒட்டு மொத்தமாக 30 இடங்களில் முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நடத்தப்பட்ட 15 முகாம்களில் கன்னியாகுமரியில் மட்டும் 26729 பேர் முழு உடல் பரிசோதனை செய்து பயன் அடைந்துள்ளார்கள். இன்றைக்கு நடைபெற்ற முகாமில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்திற்கான அட்டைகள் 10 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுரை 1 கோடியே 47 இலட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின் வாயிலாக பயன்பெற்று வருகிறார்கள் என்றாலும் புதிதாக திருமணம் ஆனவர்கள் குடும்ப உறுப்பினர்களாக மாறும் போது அவர்களும் இத்திட்டத்தில் பயன்பெறுகின்றனர்.

கன்னியாகுமரியில் 16வது வாரமாக இந்த முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதிலும் 16வது வாரமாக 35 இடங்களில் இந்த முகங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்று மாலைக்குள் ஏறத்தாழ சுமார் 70 ஆயிரம் பேர் இம்முகாமில் வாயிலாக புதிதாக பயன் பெறவுள்ளார்கள்.

இன்று காலை பூதப்பாண்டி வட்டார அரசு தலைமை மருத்துவமனைக்கு திடீர் ஆய்வுக்கு சென்றிருந்தேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் மருத்துவ துறையின் வளர்ச்சி, மருத்துவ துறையின் மேம்பாடு, மருத்துவத்துறையின் சிறப்பு ஆகியவற்றை அந்த ஒரு மருத்துவமனையின் மூலமாக தெரிந்து கொள்ள முடியும். அந்த மருத்துவ மனையில் ஒப்பளிக்கப்பட்ட 14 மருத்துவர்களும், ஒப்பளிக்கப்பட்ட 22 செவிலியர்களும் பணியில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வரை இம்மருத்துவ மனையில் பிரசவங்கள் என்று எடுத்துக் கொண்டால் மாதத்திற்கு 30 வரை நடந்தது. தற்போது அது 60 எண்ணிக்கையில் உயர்ந்திருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ மனையில் ரூ.23.50 கோடி மதிப்பில் கட்டிடம் கட்ட நிதி ஒப்புதல் தந்து, பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. புற்றுநோய் பாதிப்புகளுக்கான தீர்வு கட்டிடமும் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இந்த இரு கட்டமைப்புகளும் முதலமைச்சர் அவர்கள் இன்னும் ஒரு மாத காலத்தில் கன்னியாகுமரி மக்களுக்கு அர்பணிக்க உள்ளார்கள். மேலும் மாவட்டம் முழுவதும் 15க்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள், துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் கட்டும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. அனைத்து மருத்துவ கட்டமைப்பு பணிகளும் வரும் பிப்ரவரி மாதத்திற்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் ம.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் பேசினார்.

அதனைத்தொடர்ந்து அமைச்சர் ம.சுப்பிரமணியன், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கும், காசநோய் பாதித்த 5 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகமும், 11 பயனாளிகளுக்கு கர்ப்பிணி தாய்மார்களுக்கு மகப்பேறு சஞ்சீவி பெட்டகமும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகள் நல அட்டை 1 நபருக்கும், தையல் இயந்திரம் 1 பயனாளிக்கும், 21 பயனாளிகளுக்கு மடக்கு சக்கர நாற்காலிகளும், 3 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு கைபேசிகளும் வழங்கினார்.

நடைபெற்ற நலன் காக்கும் மருத்துவ முகாமில் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் என். சுரேஷ் ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜி.பிரின்ஸ் (குளச்சல்), செ.ராஜேஷ் குமார் (கிள்ளியூர்), முனைவர் தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), மாநில மீன்வள வாரிய தலைவர் ஜோசப் ஸ்டாலின், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தினேஷ் சந்திரன், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.லியோ டேவிட், முகாம் ஒருங்கிணைப்பாளர், துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்துகொண்டார்கள்.



புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதியில் அதிகரித்து வரும் கந்துவட்டி கும்பல் அராஜகம், ரவுடிகள் அட்டூழியம், போதை கும்பலின் அடாவடிகளை இரும்புக்கரம் கொண்டு கட்டுப்படுத்தி வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று தி.மு.க. சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ. நந்தா சரவணன், தொகுதி செயலாளர் சவுரி ராஜன் தலைமையில் துணைநிலை ஆளுநரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

## 39 ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 03.10.1923

மறைவு 24.11.1986

## திருவண்ணாமலை இரா.தர்மலிங்கம்

(ஒன்றிணைந்த வட ஆற்காடு மாவட்ட தி.மு.கழகச் செயலாளர் திருவண்ணாமலை தொகுதியின் 10 ஆண்டு காலம் (1957-1967) பாராளுமன்ற உறுப்பினர் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் பெருந்தலைவர் வட ஆற்காடு விற்பனைக்குழுவின் தலைவர் இரா.தர்மலிங்கம் அவர்களின் 39 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி!)

இவண்:

**மதிவாணன் (எ)**

**தர்மலிங்கம் அன்பழகன். பிரதீப்**

**B.E., (M.S., M.B.A.,) (U.K.)**

**மற்றும் குடும்பத்தினர்.**

## சமூக வலைதளங்களில் வலம் வருவது!




### பிஹார் தேர்தலில் முறைகேடு: நிதியமைச்சர் கணவர் புகார்

பொருளாதார நிபுணரும், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவருமான பரகலா பிரபாகர், பிஹார் தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார். பதிவான வாக்குகளை விட எப்படி 1.77 லட்சம் வாக்குகள் அதிகமாக எண்ணப்பட்டன என்பது குறித்து நாட்டு மக்களுக்கு ECI விளக்க வேண்டும். மேலும், SIR-க்கு பிறகான இறுதி வாக்காளர் பட்டியலை விட, மொத்த வாக்காளர் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில் இளைஞர் எழுச்சி நாளையொட்டி சாலவாக்கத்தில் நடைபெற்ற விழாவில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக் ஆகியோர் 1000 பேர் கலந்து கொண்ட இளைஞர் பேரணியை தொடங்கி வைத்து 49 கிலோ கேக் வெட்டி, பொதுமக்களுக்கு வழங்கினர். உடன் ஒன்றிய செயலாளர் டி.குமார், மாவட்டஇளைஞரணி அமைப்பாளர் யுவராஜ், துணை அமைப்பாளர்கள் மணி, ஆண்டோ, சஞ்சய் காந்தி, பால்ராஜ், ஒன்றிய இளைஞரணி செயலாளர் வெங்கட்ராமன், ஒன்றிய நிர்வாகிகள் சத்யா, சக்திவேல், வெங்கடேசன், ரவி, சிவராமன், சேகர், பாலமுருகன், பாண்டியன், பாபு ஷரீப், வசந்த மாலா, முரளிதரன், நந்தா, உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவொற்றியூர் க.வீராசாமி

### நவம்பர் 24 (2008)



திருவொற்றியூர் நகரத்தில் ஆரம்பகால கழகத் தோழர்.

திருவொற்றியூர் நகரக் கழக அவைத்தலைவராக, மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர். கழகத்தின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்றவர்.

திருவொற்றியூர் நகரமன்ற உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும், அசோக்லேலண்ட் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் மற்றும் நாணய சங்கத்தின் தலைவராகவும் இருந்து திறம்பட பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்ட தொ.மு.ச. மாவட்ட தலைவராக பணியாற்றி தொழிலாளர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**